2022 மே 9] *[திரு. துரைமுருகன்]*

திரும்ப, திரும்ப ஆராய்ந்து, ஆராய்ந்து கடைசியில் ஒன்றுமில்லாமல் ஒரு வல்லுநர் குழு போட வேண்டும் என்று வைத்துவிட்டார்கள். இப்போது என்ன நிலைமை என்று கேட்டீர்களென்றால், quarry-*களை எடுப்பதா, வேண்டாமா என்பதுதான் பிரச்சினை. திரு. டிராபிக் இராமசாமி போட்ட* case *ஒன்று, அதற்குள் நான் போக விரும்பவில்லை. இப்போது, அரசாங்கத்திற்குச் சொந்தமான இடங்களில்,* quarry-*களை எடுப்பதற்கு அரசாங்கம் தயாராக இருக்கிறது. அதற்காக ஒரு குழு போட்டு உட்கார்ந்து பார்க்கப் போகிறோம்.* Private land-*லும்* quarry-*களை எடுப்பதற்கு அரசாங்கம் தயாராக இருக்கிறது. நாங்கள் அறிவித்தோம்; அறிவித்த பிறகு 4 பேர்தான் வந்திருக்கிறார்கள். ஆகையினால் 4 பேரை வைத்து செய்ய முடியாது. இன்னும் கொஞ்சநாள் பொறுத்து, எல்லோரும் வந்ததற்குப் பிறகு,* E.C., *எல்லாம் போய்விட்டு வர வேண்டுமென்பதற்காக* wait *செய்கிறோம். எனவே, அழிந்துபோன அந்த கிரானைட் தொழில் கலைஞர் ஆட்சியில் இருந்தபடி தளபதியினுடைய ஆட்சியில் மீண்டும் அதேபோல் செழிக்கும்; வேலைவாய்ப்புகள் கிடைக்கும்.*

4. கவன ஈர்ப்பு

திண்டிவனம், ஸ்ரீலட்சுமி நரசிம்ம சுவாமி கோயில் நிலம், ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர் திரு. பொ. அர்ஜுனன் அவர்கள், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருவார். மாண்புமிகு உறுப்பினர் திரு. பொ. அர்ஜுனன் அவர்கள்.*

திரு. பொ. அர்ஜுனன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,. . .(குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *குழு போட முடியாது என்று சொல்லிவிட்டார்கள். நீங்கள் குழு போட்டீர்கள். நாங்கள் குழு போட முடியாது என்று சொல்லிவிட்டார்கள்.*

திரு. பொ. அர்ஜுனன்: *விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் வட்டம், ரோஷனை, இலுப்பைத் தோப்பு பகுதியில் இராமானுஜர் அறக்கட்டளை சார்பாக,. . .*

[2022 மே 9

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதில் இருப்பதை மட்டும் படியுங்கள். பிறகு இன்னும் 2 கேள்விகளுக்கு வாய்ப்புத் தருகிறேன். இன்னும் 2 வாய்ப்புத் தருகிறேன். முதலில் நீங்கள் எழுதிக் கொடுத்ததை மட்டும் வாசியுங்கள். எழுதிக் கொடுத்திருப்பீர்கள். அதில் பாருங்கள். Table செய்யப்பட்டிருக்கிறது பாருங்கள்.

திரு. பொ. அர்ஜூனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் அருள்மிகு ஸ்ரீலட்சுமி நரசிம்ம சுவாமி திருக்கோயிலுக்குச் சொந்தமான நிலம் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது" குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

பிற்பகல் 12–20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று உறுப்பினர்களின் மேசையின் மேலுள்ள சிறு கணினியில் பதிவேற்றம் செய்யப்பட்டிருக்கின்றது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அறிக்கை

விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் வட்டம் மற்றும் நகர், அருள்மிகு ஸ்ரீலட்சுமி நரசிம்ம சுவாமி திருக்கோயில் சட்டப் பிரிவு 46(ii)–ன்கீழ் பட்டியலைச் சேர்ந்த திருக்கோயில். இத்திருக்கோயில் நிருவாகம் நிலை–3 செயல் அலுவலராலும், திண்டிவனம் சரக ஆய்வரைத் தக்காராகக் கொண்டும் நிருவகிக்கப்பட்டு வருகிறது. மேற்கண்ட திருக்கோயிலின் குழுக் கோயில்களில் ஒன்றான ரோஷனை பகுதியில் அமைந்துள்ள இராமானுஜ முதலியார் அறக்கட்டளைக்குச் சொந்தமான இலுப்பைத் தோப்பு உள்ள இடத்திற்கு அருகே தனியார் திருக்கோயில் ஒன்று அமைந்துள்ளது. இத்திருக்கோயிலுக்குச் செல்ல வேண்டி இராமானுஜ முதலியார் அறக்கட்டளைக்குச் சொந்தமான திருக்கோயில் இடத்தில் நகராட்சி

2022 மே 9] [திரு. பி.கே. சேகர்பாபு]

JCB மூலம் பாதை அமைக்கப்பட்டு வருவதாகத் தொலைபேசிமூலம் திருக்கோயிலுக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, திருக்கோயில் நிருவாகத்தின் அனுமதியின்றி திருக்கோயில் இடத்தில் பாதை அமைக்கப்படுவதைத் தடுத்து நிறுத்திட வேண்டுமென்று ரோஷனை காவல் நிலையத்தில் செயல் அலுவலரால் புகார் மனு அளிக்கப்பட்டு, CSR பெறப்பட்டது. தற்போது பாதை அமைப்பது தடுத்து நிறுத்தப்பட்டுவிட்டது. மேலும், மேற்கண்ட திருக்கோயில் இடத்தில் வேலி அமைப்பதற்காக மதிப்பீடு தயார் செய்யப்பட்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பொ. அர்ஜுனன் அவர்கள்.

திரு. பொ. அர்ஜுனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் வட்டம், ரோஷனை, இலுப்பைத் தோப்பு பகுதியில் இராமானுஜர் அறக்கட்டளையின் சார்பாக சுமார் 50 ஏக்கர் நிலம் அருள்மிகு ஸ்ரீலட்சுமி நரசிம்ம சுவாமி திருக்கோயிலுக்கு வழங்கப்பட்டுள்ளது. இந்த நிலம் விவசாயம் செய்யும் விவசாயிகளிடம் குத்தகைக்கு விடப்பட்டு, குத்தகைப் பணம் வசூலிக்கப்பட்டு வருகின்றது.

கடந்த 15-4-2022 அன்று சில சமூக விரோதிகள், பல்லவர் காலத்தைச் சேர்ந்த அருள்மிகு ஸ்ரீலட்சுமி நரசிம்ம சுவாமி கோயிலுக்குச் சொந்தமான ரூ.100 கோடி மதிப்புள்ள நிலத்தின் நடுவே சாலை அமைத்துள்ளார்கள். இந்த இடத்திலிருந்து இலட்சக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள மரங்கள் இரவோடு இரவாக வெட்டப்பட்டு, சாலை அமைக்கப்பட்டுள்ளது. அவர்களுடைய நோக்கம் சாலை வழியாக, கோயில் நிலத்தின் பின்புறத்தில் உள்ள நிலங்களை கையகப்படுத்துவது மட்டுமல்லாமல், கோயில் நிலத்தையும் அபரிக்கும் எண்ணமும் உள்ளது. இந்தப் புகார் ** அவர்களால் எழுப்பப்பட்டு, கோயில் நிர்வாக அலுவலரால் ரோஷனை காவல் நிலையத்தில் 16-4-2022 அன்று. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், இன்னொரு கேள்வி இருக்கிறது. என்ன செய்தியோ அதைச் சொல்லுங்கள்? ஆக்கிரமிப்பை அகற்றச் சொல்லுங்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[2022 மே 9

திரு. பொ. அர்ஜுனன்: *16–4–2022 அன்று புகார் மனு அளிக்கப்பட்டுள்ளது. இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. திண்டிவனம் அருள்மிகு ஸ்ரீலட்சுமி நரசிம்ம சுவாமி பெருமாளை வழிபட்டால், தீராத வினைகளும் தீர்ந்து, சகல செல்வங்களும் நம்மைச் சேரும் என்பது பக்தர்களின் அசைக்க முடியாத நம்பிக்கையாக உள்ளது. இக்கோயிலில், ஆளும் அரசின் பிரதிநிதியாக, ** இருக்கும் ** நடைபெறும் நில ஆக்கிரமிப்பைத் தடுத்து நடவடிக்கைகளை எடுக்கவும், தவறு செய்தவர்கள் யாராக இருந்தாலும், அரசு இரும்புக் கரம் கொண்டு அடக்க வேண்டுமென மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்தைத் தொகுதி மக்களின் சார்பாக ஈர்த்து அமைகின்றேன். நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமானுஜர் அறக்கட்டளைக்குச் சொந்தமான தனூர் அறக்கட்டளைக்காக 54 ஏக்கர் நிலம் விவசாயிகளிடம் குத்தகைக்கு வழங்கப்பட்டு, அதில் வருகின்ற வருவாய் ஸ்ரீலட்சுமி நரசிம்ம சுவாமி மற்றும் தீர்த்தவாரிசுரர் ஆகிய இரண்டு கோயில்களின் வளர்ச்சிப் பணிகளுக்கு பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இந்தத் திருக்கோயிலுக்குச் சொந்தமான சுமார் 24 ஏக்கர் இடத்தில், தங்கள் வாழ்வாதாரத்திற்காகக் குடியிருக்கின்ற அந்த மக்களுக்கு, வரன்முறை செய்வதற்கு, அவர்கள் மறுகுடியமர்வுக்குண்டான போதிய வசதி இல்லாததை அறிந்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்—ஏற்கெனவே 2000 ஆம் ஆண்டு மாண்புமிகு முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களால் வெளியிடப்பட்ட ஓர் அரசாணையின்படி—குழுவாகக் குடியேறிய அவர்களுக்கு அந்த இடத்திலேயே வரன்முறை செய்து வாடகை நிர்ணயம் செய்து, அவர்கள் குடியிருப்பதற்குண்டான வாய்ப்புகளை உருவாக்கித் தர அறிவுறுத்தியிருக்கின்றார்கள். அந்த வகையில் வரன்முறை செய்கின்ற பணிகள் ஒருபுறம் நடந்து கொண்டிருக்கின்றன. நீங்கள் கூறிய அந்த இடம் என்பது ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட இடமல்ல.*

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில குறிப்பிட்ட பெயர்களை அவர் கூறியிருக்கின்றார். அந்த இடத்தில் ஈஸ்வரன் திருக்கோயில் அமைந்திருக்கின்றது. அதில் இருக்கின்ற 24 ஏக்கர் இடத்தில், சுமார் 4 ஏக்கர் நிலம் இலுப்பைத் தோப்பைச் சார்ந்த இடத்திற்கு, அந்த திருக்கோயிலுக்கு சாலை அமைப்பதற்காக, சாலை போடுகின்ற பணியில் ஈடுபடுகின்றார்கள். அது திருக்கோயிலுக்குச் சொந்தமான இடம் என்பதால், இந்து சமய அறநிலையத் துறைக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டவுடன், 16-4-2022 அன்று ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு, அங்கே செடி நடுகின்ற பணிகள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. ஆகவே, தனியார் திருக்கோயிலுக்குச் சொந்தமாக பாதைகள் அமைக்கப்படுகின்ற சூழ்நிலை வருகின்றபோது அந்தத் திருக்கோயிலை இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் அந்தத் தனியார் கொண்டு வருவார்களேயானால், அந்தப் பாதை அமைப்பதற்குத் துறையே முயற்சிகளை மேற்கொள்ளும். ஆக்கிரமிப்பு தற்போது ஏதுமில்லை. "இறை சொத்து இறைவனுக்கே" என்ற தாரக மந்திரத்தின் அடிப்படையில் செயல்படுகின்ற மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆக்கிரமிப்புகளில் ஈடுபடுபவர்களை இன்னார், இனியவர் என்று இல்லாமல், யாராக இருந்தாலும் நடவடிக்கை எடுத்து, திருக்கோயில்களின் சொத்துகள் பாதுகாக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பொ. அர்ஜுனன் அவர்கள்.*

திரு. பொ. அர்ஜுனன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாதுகாக்கப்பட வேண்டும் என்பதுதான் எங்களுடைய கோரிக்கை. அரசு முன்னின்று தவறு செய்தவர்கள்மீது தக்க நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

பிற்பகல் 12-25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்*

[திரு. பி.கே. சேகர்பாபு] [2022 மே 9

பேசும்போது குறிப்பிட்ட ஒருசில பெயர்களை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அந்த ஆக்கிரமிப்பு என்பது அந்தத் திருக்கோயிலுக்குச் செல்வதற்கான சாலை அமைப்பதற்காகப் பயன்படுத்தியிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட அந்தப் பெயர்கள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன.*

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: *எனவே, உடனடியாக அதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, தற்போது அந்த இடம் இந்து சமய அறநிலையத் துறை வசம்தான் இருக்கின்றது. அங்கு தற்போது செடிகள் நடும் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) தமிழ்நாடு நகராட்சி சட்டங்கள் மற்றும் சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்றல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2022

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சி சட்டங்கள் மற்றும் சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்றல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. கே.என். நேரு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

“2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சி சட்டங்கள் மற்றும் சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்றல் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்”

எனக் கோருகிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்கள்.*